## சென்னையில் இன்று முதல்

# மெட்ரோ ரெயில் சேவை அதிகரிப்பு

சென்னை,மார்ச்.2–

சென்னையில் அடுத்தகட்ட போக்குவரத்து வசதியாக மெட்ரோ ரெயில் சேவை மாறிவருகிறது. சென்னையில் தற்போது 2 வழித்தடங்களில் 54 கி.மீட்டர் தூரத்திற்கு இயக்கப்பட்டு வருகின்றன.

விமான நிலையம் கோயம்பேடு, சென்ட்ரல், எழும்பூர் மற்றும் வடசென்னையை இணைக்கும் வகையில் மெட்ரோ ரெயில்கள் இயக்கப்படுவதால் பயணிகள் போக்குவரத்து நெரிசல் இன்றி பயணித்து வருகின்றனர்.

**மெட்ரோ ரெயில் கட்ணம்**

மேலும் மெட்ரோ ரெயில் கட்டணம் ரூ.10 முதல் 20 வரை குறைக்கப்பட்டு அதிகபட்ச கட்டணமாக ரூ.50 நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. இதனால் மெட்ரோ ரெயில் சேவையை பயணிகள் விரும்பி பயணம் செய்து வருகிறார்கள். அனைத்து மெட்ரோ ரெயில்களிலும் கூட்டம் அதிகமாக காணப்படுகிறது.

இதற்கிடையே பயணிகள் கூட்டம் அதிகமாக இருக்கும். காலை மற்றும் மாலை நேரங்கள் கூடுதலாக மெட்ரோ ரெயில்களை இயக்க வேண்டும் என்று பயணிகள் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வந்தனர்.

**அதிகரிப்பு**

சென்னையில் மெட்ரோ ரெயில் சேவை இன்று முதல் அதிகரிக்கப்பட்டு உள்ளது. பயணிகள் வருகை அதிகம் உள்ள நேரங்களில் கூடுதலாக மெட்ரோ ரெயில்கள் 5 நிமிடத்துக்கு ஒரு முறை இயக்கப்படுகிறது.

காலை 8 மணி முதல் 10 மணிவரை இயக்கப்பட்ட கூடுதல் மெட்ரோ ரெயில்கள் இனி இன்று முதல் காலை 7 மணி முதல் 11 மணிவரை இயக்கப்படும்.

இதே போல் மாலை 4 மணிமுதல் இரவு 7 மணிவரை இயக்கப்பட்ட கூடுதல் மெட்ரோ ரெயில்கள் இனி இன்று மாலை 4 மணி முதல் இரவு 8 மணிவரை இயக்கப்படுகிறது. இதனால் பயணிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.